Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 556/2024

2026-ம் ஆண்டு **ஜீலை** மாதம் **03-ம்** தேதி **வெள்ளிக்கிழமை** குற்றம் முறையிடுபவரின் **அ.சா. 2-வது** நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சதீஷ்குமார், Bench Clerk Grade III அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | கூலி |
| பெயர். | - | ரமேஷ் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | மண்ணாங்கட்டி | சமயம் | - | - |
| கிராமம் | - | கொல்லூர் | வயது | - | 42 |

03.07.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கொல்லூாரியில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான்.மேற்படி கையெழுத்தை சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு எனது சொந்த வேலை காரணமாக காவல் நிலையம் சென்றிருந்தபோது போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. **பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சிகையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.. போலீசார் விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

கடந்த 11.06.2023 ந் தேதி 16.30 மணியளவில் போலீசார் சண்டை வழக்கு சம்மந்தமாக சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்தார்கள் என்றாலும் அவரது விசாரணைக்கு நான் சாட்சியாக இருந்து அவர்கள் தயார் செய்த பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> - இல்லை**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Digitally signed by SENTHILKUMAR
Date: 2026.07.03 16:08:01 +0530

D.M-cum-JM.

T.V.Nallur.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 556/2024

2026-ம் ஆண்டு **ஜீலை** மாதம் **03-ம்** தேதி **வெள்ளிக்கிழமை** குற்றம் முறையிடுபவரின் **அ.சா. 3-வது** நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சதீஷ்குமார், Bench Clerk Grade III அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | தலைமைக்காவலர் 2555 |
| பெயர். | - | அரிகுமார் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | ரகோத்தமன் | சமயம் | - | - |
| கிராமம் | - | அரகண்டநல்லூர் | வயது | - | 39 |

03.07.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**.

1. நான் தற்போது அரகண்டநல்லூர் காவல் நிலையத்தில் தலைமை காவலர் 2555 ஆக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கை பதிவு செய்து புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் திரு.அன்பழகன் என்பவரின் கையெழுத்தும் கை நடையும் எனக்கு நன்கு தெரியும் என்பதாலும் அவர்கள் தயார் செய்து வைத்திருந்த கோப்புகளின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 11.06.2023 ந் தேதி 15.00 மணியளவில் உதவி ஆய்வாளர் திரு.அன்பழகன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது கோட்டமருதுார் கிராமத்தைச் சேர்ந்த முனுசாமி மகன் குமாரசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப்பெற்று நிலைய குற்ற எண்.303/2023 ச/பி. 294(பி), 323, 506(1) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அந்த புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை முறையே அசாஆ.3 ,4 ஆகும்.**

3. மேற்படி வழக்கை அவரே விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றே 16.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சாந்தகுமார் மற்றும் ரமேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வை மகஜர் மற்றும் வரைபடம் அசாஆ.5, 6 ஆகும்**.

4. பின்பு சாட்சிகள் குமாரசாமி, ராஜலட்சுமி, மனோகர்ராஜ், பெருநாரப்பன், சாந்தகுமார் மற்றும் ரமேஷ் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அவரது விசாரணையில் சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரியை தேடிச்சென்றதில் எதிரி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் மூலம் முன்பிணையில் சென்றுவிட்டதால் அவரை கைது செய்யவில்லை.

5. இந்த சம்பவத்தில் காயம்பட்ட குமாரசாமி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் யாமினி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு பெற்றுள்ளார். அந்த **விபத்து பதிவேடு அ.சா.ஆ.7 ஆகும்.** அதில் மருத்துவர் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என கருத்துரை வழங்கியுள்ளார். இத்துடன் அவரது வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது ச/பி. 294(பி), 323, 506(1) இதச படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**.

நான் இந்த வழக்கின் விசாரணை அதிகாரி அல்ல, கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரினை பெற்று சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Digitally signed by SENTHILKUMAR
Date: 2026.07.03 16:08:07 +0530

D.M-cum-JM.
T.V.Nallur.